THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 9th February 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAO in the Chair.

I.—WELCOME TO HON. SPEAKER ON HIS RETURN FROM OVERSEAS TOUR.

THE HON. SRI C. **SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, வெளிநாடு சென்று திரும்பிவந்திருக்கும் கனம் சபாநாயகர் அவர்களுக்கு இந்த சபையின் சார்பில் நல்வரவு கூற விரும்புகிறேன். அவர் வெளிநாட்டில் பெற்றுள்ள அனுபவமும் அங்கே அவர் பார்த்துள்ளவைகளும் இந்த சபையின் நடவடிக்கைகளுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அவர் வெளிநாட்டிற்குச் சென்று இன்னும் நல்ல திடகாத்திரமான தேகத்துடன் திரும்பி வந்திருப்பது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய விஷயம்.

MR. **SPEAKER** : கனம் நிதி மந்திரி அவர்களுக்கும் மற்ற கனம் அங்கத்தினர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கம். வெளிநாடுகளில், அங்குள்ளவர்கள் என்னை அன்போடும் மரியாதையோடும் வரவேற்றார்கள். நான் வெளிநாடுகளுக்கு இந்த சபையின் பிரதிநிதியாகத்தான் சென்றேன். ஆகையால் வெளிநாடுகளில் எனக்குச் செய்யப்பட்ட மரியாதைகள் இந்த சபைக்குத் தான் சேரும் என்று நான் திடமாகச் சொல்லலாம். நான் சென்றிருந்த நாடுகளில் என்ன என்ன பார்த்தேன், என்ன அனுபவங்கள் எல்லாம் பெற்றேன் என்பதை ஒரு நாள் இந்த சபையின் கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் சொல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த சபை சம்பந்தமாக எத்தனையோ விசேஷமான சமாசாரங்கள் உங்கள் எல்லோருக்கும் சொல்லப்பட வேண்டியிருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். அவைகளை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா இல்லையா என்பது வேறு விஷயம். என் அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும் உங்களிடம் சொல்லி உங்கள் ஆதரவைப் பெற வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் எல்லோரும் இப்போது என்னை அன்புடன் வரவேற்றதற்கு உங்கள் எல்லோருக்கும் இன்னொரு முறை நன்றி செலுத்துகிறேன்.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Wild life and birds

* 121 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to make a survey of the wild life and birds that are available in the State; and

(*b*) what the wild species are that are found in the Kanyakumari district and Shencottah taluk?